<u>குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்</u>
<u>எஸ்.டி.சி. எண். 07 /2020</u>

<u>PW1- முருகேசன் த/பெ. கோவிந்தன்</u>
<u>தேதி- 03.02.2021</u>
<u>பக்க எண்- 1</u>
<u>குறுக்கு விசாரணை</u>

<u>(சிஎம்.பி எண்கள் 40/2021 மற்றும் 41/2021 மனுக்கள் அனுமதிக்கப்பட்டதன் பேரில் எஸ்டிசி எண். 07/2020 மற்றும் எஸ்டிசி எண் 17/2020 ஒன்றாக விசாரிக்கப்படுகிறது. )</u>

மேற்படி இரண்டு வழக்குகளிலும், நான் தாக்கல் செய்துள்ள புகார், பிரமாணபத்திரிக்கை, வழக்கறிஞர் அறிவிப்பு, பதில் அறிவிப்பு ஆகியவற்றில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். டேனிஷ்பேட்டை என்ற ஊருக்கு சேலத்தில் இருந்து 45 கி.மீ. தூரத்தில் உள்ள தீவட்டி பட்டி வழியாக உள்ளே செல்லவேண்டும். நான் டேனிஷ்பேட்டையில் 35 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். என் மனைவி, மகன், தந்தை ஆகியோர் டேனிஷ்பேட்டையில் தான் குடியிருந்து வருகிறார்கள். சேலத்தில் மாங்காய் மண்டிகள் நிறைய உள்ளன. எதிரியுடைய மாங்காய் மண்டியும் பல வருடங்களாக இருந்து வருகிறது. சுமார் 70- 80 நபர்கள் எதிரியின் மாங்காய் மண்டியில் வர்த்தக தொடர்பு வைத்துள்ளனர். நான் 20 வருடங்களாக எதிரியுடன் வியாபார தொடர்பு வைத்துள்ளேன். நான் கமிசன் அடிப்படையில் எதிரியுடன் வியாபார தொடர்பு வைத்துள்ளேன். நான் கொடுக்கும் மாங்காய்களை விற்று தன்னுடைய கமிசனை எடுத்துக்கொண்டு மீதி பணத்தை எதிரி எனக்கு தருவார். என்னுடைய ஏஜென்டாக எதிரி இயங்கினார் என்று என் வழக்கில் கூறியுள்ளேன். மாங்காய் சீசன் ஒவ்வொரு வருடமும், பிப்ரவரி மாதம் கடைசியில் இருநது சூலை மாதம் முதல் வாரம் வரை இருக்குமா என்றால், தை மாத கடைசியில் இருந்து சித்திரை மாதம் கடைசி வரை இருக்கும். மாங்காய் விலை அவ்வப்போது அதன் உற்பத்தி மற்றும் வரத்தை பொருத்து மாறுபடும். சேலத்தில் பல வகை மாங்காய்கள் உள்ளன. ஒவ்வொரு ரகமும் ஒவ்வொரு விலையாகும். ஒவ்வொரு ரகத்தின் விலையும் ஒவ்வொரு நாளும் அதன் தரத்தை பொருத்து மாறுபடும். எதிரி மீது இந்த நீதிமன்றத்தில் என்னுடைய இரண்டு வழக்குகளையும் சேர்த்து மொத்தம் 7 வழக்குகள் நிலுவையில் உள்ளது. 2018-ஆம் வருடம் மாங்காய் சீசன் முடிந்து எதிரியுடன்சம்மந்தப்பட்ட புகார்தாரர்களுக்கு ஏற்பட்ட பிரச்சனை காரமாக 7 வழக்குகள் எதிரி மீது போடப்பட்டன. இது தவிர மேட்டுரில் 3 வழக்குகள் எதிரி மீது நிலுவையில் உள்ளன. என் தந்தை கோவிந்தன் ஆஜர் எதிரியின் மீது போட்ட எஸ்டிசி எண். 14/2020 வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. என் சித்தப்பா வெங்கடாசலம் ஆஜர் எதிரியின் மீது போட்ட எஸ்டிசி எண். 15/2020 வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில உள்ளது. என் அக்கா மகன் வெங்கடேசன் எதிரி மீது போட்ட எஸ்டிசி எண். 01/2020

எஸ்.டி.சி. எண். 07 /2020

PW1- முருகேசன் த/பெ. கோவிந்தன்
தேதி- 03.02.2021
பக்க எண்- 2
குறுக்கு விசாரணை

வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. 13-09-2018-அன்று மேற்படி கோவிந்தன், வெங்கடாசலம், வெங்கடேஷ் ஆகியோர்களுக்காக மேற்படி வழக்குகளின் காசோலைகளை நான் எதிரியிடம் இருந்து பெற்று வந்தேன். மேற்கூறிய வழக்குகளில் உள்ள புகார் தாரர்களை தவிர்த்து மேலும் தீவட்டிபட்டி, டேனிஷ்பேட்டை, மஞ்சவாடியை சேர்ந்த சில நபர்கள் எதிரியுடன் மாங்காய் வியாபாரம் செய்து வருகின்றனர். யார் யாரிடம் எந்த ரக மாங்காய்களை வாங்கி எதிரியிடம் கொடுத்து வியாபாரம் செய்தேன் என்ற விபரத்தை வழக்கில் கூறவில்லை. பிற நபர்களிடம் எவ்வளவு தொகைக்கு மாங்காய்களை வாங்கி எதிரியிடம் கொடுத்தேன் என்று என் வழக்கில் கூறவில்லை. அதற்குண்டான ரசீதுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எதிரியிடம் எந்த விலைக்கு மாங்காய்களை கொடுத்தேன் என்ற விபரத்தை இவ்வழக்கில் கூறவில்லை. அப்படி கொடுக்கும் போது எதிரி எனக்கு கொடுக்கும் பில்களை வாங்கி எனக்கு மாங்காய்களை கொடுத்தவர்களிடம் கொடுப்பேன். மேற்படி பில்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். என் வரவு செலவுகளை என் வங்கி மூலமாக தான் எப்போதும் செய்வேன். பிற நபர்களிடம் மாங்காய்களை வாங்கிய வங்கி விபரங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என் புகார், பிரமாண பத்திரிக்கை, வழக்கறிஞர் அறிவிப்பில் எனக்கு மாங்காய் சப்ளை செய்தவர்கள் பற்றிய விபரத்தை குறிப்பிடவில்லை. என் புகார், பிரமாண பத்திரிக்கை, வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரிக்கான கமிசன் தொகை எவ்வளவு என்பது பற்றிய விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 10 சதவீதம் என்று குறிப்பிட்டுள்ளேன். சராசரியாக மாங்காயின் விலை எவ்வளவு இருந்தது என்ற விபரத்தை என் வழக்கில் கூறவில்லை. எனக்கு சொந்தமான விவசாய நிலம் மற்றும் பரப்பு மற்றும் சர்வே எண் குறித்து என் வழக்கில் கூறவில்லை. என் விவசாய நிலங்களில் என்ன பயிரிடுகிறேன் என்பது குறித்து எந்த விபரமும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. என் நிலத்தில் எவ்வளவு மாங்காய் மரங்கள் உள்ளன என்பது பற்றி என் வழக்கில் குறிப்பிடவில்லை. என் நிலம் நஞ்சையா புஞ்சையா என்று குறிப்பிடவில்லை. எந்த ரக மாங்காய்கள் விளைவித்தேன் என்று என் வழக்கில் குறிப்பிடவில்லை. மாங்காய் சீசனில் எவ்வளவு லோடு மாங்காய்கள் எதிரிக்கு அனுப்பினேன் என்ற விபரத்தை என் வழக்கில் கூறவில்லை. லோடு அனுப்பிய வாகனம் அதன் எண். டீசல் ரசீது, டிரிப் ரசீது, டோல்கேட் ரசீது குறித்த விபரத்தை என் வழக்கில்

குறுக்கு விசாரணை

கூறவில்லை. எதிரியின் மண்டியில் இருந்து மாங்காய்களை பெற்று கிருஷ்ணகிரியில் உள்ள MAA Factory -யில் கொடுத்தேன். அது பற்றியவிபரங்களை என் வழக்கில் கூறவில்லை. பொதுவாக மாங்காய், மாம்பழம் அழுகக்கூடிய பொருள் ஆகும். என் வழக்கில் முருகேசன், த/பெ. கோவிந்தன், உள்கோம்பை டேனிஷ்பேட்டை என்று கூறியுள்ள முகவரிதான் எனது ஆதார்கார்டு, ஸ்மார்ட்கார்டில் உள்ளது. எனது புகார், வழக்கறிஞர் அறிவிப்பு, பதில் அறிவிப்பு பிரமாண பத்திரிக்கை யில் முருகேசன் என்கிற உடையாப்பட்டி முருகன் என்று குறிப்பிடவில்லை. என் வங்கி கணக்கிலும் முருகேசன் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன். என் பிரமாண பத்திரிக்கையில் நாலாம் பத்தியில் உடையாபப்பட்டி முருகனுக்கு எதிரி வியாபார தொடர்பாக கொடுக்க வேண்டிய நிலுவை தொகை ரூ.55,39,887.40 என்று கண்டுள்ளது. அதில் ஞானசேகர் என்பவர் என் மைத்துனர். அவர் டேனிஷ்பேட்டை சந்தைபேட்டையில் குடியிருக்கிறார். இவ்வழக்கில் நான் குறிப்பிட்டுள்ள பாலாஜி, சுகந்தி, ஞானசேகர் ஆகியோருக்கு என்னை தவிர்த்து எதிரி கொடுக்க வேண்டிய நிலுவை தொகை ரூ. 36,41,528.00 ஆகும். உடையாபட்டி சேலத்தில் இருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. மேற்படி சுகந்தி, பாலாஜி ஞானசேகர் உடையாபட்டி முருகன் ஆகியோரின் ஆதார்கார்டு, வங்கி கணக்கு, ஸ்மார்ட் கார்டின் நகலையாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. என் பிரமாண பத்திரிக்கை, புகாரில், வழக்கறிஞர் அறிவிப்பில் மேற்கண்ட நபர்கள் அனைவரும் என் குடும்ப உறுப்பினர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்கண்ட நபர்களுடன் நான் ஏதாவது வியாபார தொடர்பு வைத்ததற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. ரூ. 36 லட்சம் ஒரு பெரிய தொகையாகும். மேற்படி நபர்களுக்காக எதிரியிடம் இருந்து காசோலை வாங்குவதற்கு ஏதேனும் பொது அதிகாரப்பத்திரம் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. என்னுடைய பிரமாண பத்திரிக்கை, புகாரில், எதிரி எனக்கு ரூபாய் 20 லட்சத்து 50 ஆயிரம் கொடுத்தார் என்று கூறியுள்ளேன். மேற்படி தொகையை எங்களுக்கு கொடுத்தார் என்று குறிப்பிடவில்லை. மேற்படி சுகந்தி, பாலாஜி, ஞானசேகர் ஆகியோருக்கு உள்ள நிலம் பற்றியோ, அதன் விபரங்கள் பற்றியோ, அவர்கள் யாரிடம் இருந்து மாங்காய் வாங்கினார்கள் என்ற விபரம் பற்றியோ என் வழக்கில் கூறவில்லை. மேற்படி சுகந்தி, பாலாஜி, ஞானசேகர், உடையாப்பட்டி முருகன் ஆகியோரை என் வழக்கில் சாட்சிய பட்டியலில் சேர்க்கவில்லை. மாங்காய்களை பிற நபர்களிடம் இருநது வாங்கி நான்தான் எதிரிக்கு கொடுத்தேன். ஒவ்வொரு ஊரிலும், கணக்கு காட்டுவதற்காக

எஸ்.டி.சி. எண். 07 /2020

PW1- முருகேசன் த/பெ. கோவிந்தன்

தேதி- 03.02.2021

பக்க எண்- 4

குறுக்கு விசாரணை

சுகந்தி, பாலாஜி, ஞானசேகர், உடையாபட்டி முருகன் ஆகியோரின் பெயர்களை சேர்த்தேன். மேற்கண்ட வியாபார பரிவர்த்தனைகள் பினாமி சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சொந்த விவசாய வருமானத்தில் வருமான வரி கட்ட தேவையில்லை என்றாலும், பிறரிடம் இருந்து விவசாய பொருட்களை வாங்கி விற்றால் வருமான வரி கட்ட வேண்டும் என்றாலும், சரிதான். வருமான வரி சட்டத்தின்படி மேற்கண்ட சுகந்தி, பாலாஜி, ஞானசேகர், உடையாப்பட்டி முருகன் ஆகியோர்களின் பெயரில் நான் வியாபார பரிவர்த்தனைகள் செய்தது தவறு என்றால் சரியல்ல. உடையாபட்டி முருகன் நான்தான் என்று கற்பனையாக எடுத்துக்கொண்டாலுமே என்னுடைய புகார், பிரமாண பததிரிக்கை, வழக்கறிஞர் அறிவிப்பில் ரூபாய் 20 லட்சத்து 50 ஆயிரத்தை தனிப்பட்ட முறையில் எதிரி எனக்கு கொடுத்துவிட்டார் என்று கண்டுள்ளது எனும் பட்சத்தில் எனக்கு கொடுக்கவேண்டிய 34,89,887.40 தொகையை விட வழக்கு காசோலைகளின் தொகை சுமார் 20 லட்சம் ரூபாய் அதிகம் உள்ளது. ரூபாய் 71,30,875.40 காசு எதிரி எனக்கு கொடுக்கவேண்டும். அதற்காக தான் 3 காசோலைகளை ஒவ்வொன்றிற்கும் 15 லட்ச ரூபாய்க்கு எதிரி கொடுத்துள்ளார். அது போக ஒரு காசோலை 9 லட்ச ரூபாய்க்கு எதிரி கொடுத்துள்ளார். மேற்படி ரூபாய் 71,30,875.40 காசு தொகையை குறிப்பிட்டு எனக்கு தரவேண்டும் என்று என் வழக்கில் கூறவில்லை. வெளிப்படையான ஆதாரம் மற்றும் ஆவணம் ஏதும் இன்றி மேற்படி சுகந்தி, பாலாஜி, ஞானசேகர், உடையாப்பட்டி முருகன் ஆகியோருக்காக காசோலைகளை எதிரியிடம் நான் பெற முடியாது என்றால் சரியல்ல. பில்கள் உள்ளன. என்னுடைய புகார், பிரமாண பத்திரிக்கை, வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியிடம் நான் பணத்தை கேட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என் சட்ட அறிவிப்பில் எதிரி எனக்கு சட்டப்படியான கடனுக்காக காசோலைகள் தந்தார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து எனக்கு வரவேண்டிய ரூபாய் 71,30,875.40 காசு தொகையில் பகுதி தொகைக்குதான் எதிரி வழக்கு காசோலைகளை எனக்கு கொடுத்தார் என்று என் வழக்கில் குறிப்பிடவில்லை. என்னுடைய புகார், பிரமாண பத்திரிக்கை, வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி எந்த இடத்தில் எந்த நேரத்தில் என்னிடம் காசோலைகள் கொடுத்தார் என்று குறிப்பிடவில்லை. 13-09-2018-ஆம் காலகட்டத்தில் பெங்களுரை சேர்ந்த AK Fruits நிறுவனத்தை நடத்தி வரும் உறசியுல்லா என்பவர் எதிரியை வியாபாரத்தில் ஏமாற்றி விட்டார் என்ற விபரம் எனக்கு தெரியும். சாட்சி தற்போது தெரியாது என்று கூறுகிறார். ,

எஸ்.டி.சி. எண். 07 /2020

PW1- முருகேசன் த/பெ. கோவிந்தன்
தேதி- 03.02.2021
பக்க எண்- 5
குறுக்கு விசாரணை

மேற்படி விபரத்தை எதிரி எனக்கு கூறியதாக என்னுடைய புகார், பிரமாண பத்திரிக்கை வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ளேன். இது சம்மந்தமாக செப்டம்பர்மாதம் 2018-இல் எதிரி மேற்படி உறசியுல்லா மீது சேலம் சிசிபி போலிசில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி உறசியுல்லா மீது வியாபார சங்கத்தில் புகார் ஏதும் நான் தரவில்லை. மேற்படி உறசியுல்லா பெங்களூரை சார்ந்தவர் என்று தெரிந்து கொண்டேன். ஒப்பந்த சட்டப்படி எதிரிக்கு நான் Principal என்ற வகையில் நான் மேற்படி உறசியுல்லா மீது நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. 13-09-2018-என்ற ஒரே தேதியில் ஒரே வங்கியின் மூன்று காசோலைகளை எதிரி எனக்கு தரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 09-11-2018-அன்று மூன்று காசோலைகளையும் வசூலுக்கு செலுத்தினேன். அது குறித்து 12-11-2018 மற்றும் 26-11-2018- தேதிகளில் எதிரிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். 15-11-2018-இல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வழக்கு காசோலைகளை குறித்து புகார் தந்து மேற்படி புகார் பெயரில் சேலம் சிசிபி போலிசில் விசாரித்தனர். மேற்படி புகாரில் என்னுடன் சேர்த்து சுமார் 13-14 பேர்கள் எதிரி மீது புகார் செய்திருந்தனர். அவ்வாறு சேலம் சிசிபி போலிஸ் சுமார் ஒரு மாத காலம் எங்களையும், எதிரியையும் விசாரித்து எதிரி எனக்கு ரூபாய். 10,91,425.00 கொடுத்தார். மேற்படி விசாரணையில் மொத்தமாக ரூபாய் 50 லட்சம் எதிரி ஒப்படைத்து அதில் விகிதாசாரப்படி எனக்கு ரூபாய். 10,91,425.00 தரப்பட்டது. சேலம் சிசிபியில் வைத்து இவ்வழக்கு காசோலைகள் சம்மந்தமாக ரூபாய் 50 லட்சம் எதிரியால் எங்களுக்கு கொடுக்கப்பட்டு புகார் முடித்துவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. மொத்தம் 106 நபர்கள் எதிரி மீது புகார் கொடுத்திருந்தனர். 106 நபர்கள் என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. மேற்படி சேலம் சிசிபி புகார் விசாரணையில் பணம் பெற்றுக்கொண்டபின்னர் 26-11-2018-ஆம் தேதியில் (அடுத்தநாளே) சட்ட அறிவிப்பு எதிரிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி சேலம் சிசிபி புகார் பற்றி என் வழக்கில் கூறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சேலம் சிசிபி புகார் பற்றியோ, அந்த புகார் முடிக்கப்பட்டது பற்றியோ என் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் பணம் எதிரியிடம் இருந்து பெற்றுக்கொண்டது பற்றி குறிப்பிட்டுள்ளேன். என் வழக்கில் எந்த சூழ்நிலையில் எந்த இடத்தில் ரூபாய். 10,91,425.00 எதிரியிடம் இருந்து பெற்றுக்கொண்டேன் என்பது பற்றி குறிப்பிடவில்லை. சிசிபி புகார் பற்றி வழக்கில் கூறினால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்படமாட்டாது

குறுக்கு விசாரணை

என்பதால்தான் அது பற்றி என் வழக்கில் கூறவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலைகள் குறித்து ஏற்கெனவே சேலம் சிசிபியில் முழு தொகையும் எதிரியால் எனக்கு செலுத்தப்பட்டுவிட்டது என்றாலும், எனவே முடிந்துவிட்ட வழக்கு மூலத்தை வைத்து இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றாலும், சரியல்ல. எதிரியிடம் இருந்து இரண்டாம் முறை துர்லாபம் அடைய இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சேலம் சிசிபி மூலம் எதிரியிடம் இருந்து வாங்கிய ரூபாய். 10,91,425.00 தொகை கூட மேற்படி உறசியுல்லாதான் எனக்கு தரவேண்டும் என்றாலும் விவசாயிகள் என்ற போர்வையில் போலிசாருக்கு அழுத்தம் கொடுத்து எதிரியிடம் இருந்து பணத்தை பெற்றேன் என்றாலும் சரியல்ல. மேற்படி உறசியுல்லா என் நண்பர் என்றால் சரி அல்ல. அவர் யார் என்றே எனக்கு தெரியாது. மேற்படி உறசியுல்லா மீது பெங்ளுர் காவல் நிலையத்தில எதிரியால் புகார் கொடுக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. மேற்படி புகாரின் பேரில் பெங்களுர் காவல்துறையினருக்கு நான் உறசியுல்லாவின் நண்பர் என்ற முறையில் ஒத்துழைப்பு தரவில்லை என்றால் சரியல்ல. எனக்கு உறசியுல்லா யார் என்றே எனக்கு தெரியாது. 13-09-2018- அன்று சுமார் 25 நபர்கள் எதிரியின் மண்டிக்கு சென்றோம். மேற்படி தேதியில் காலை முதல் மாலை 5.30 மணி வரை எதிரியின் மண்டியில் இருந்து எதிரியிடம் இருந்து பலவந்தமாக மிரட்டி பயமுறுத்தி காசோலைகளை பெற்றோம் என்றால் சரியல்ல. மேற்படி காசோலைகளை எதிரி கொடுக்கும்போது செக்யூரிட்டிக்காகதான் காசோலைகள் தரப்பட்டது என்று எழுதி தருமாறு எதிரியும் எதிரியின் கணவரும் அங்கிருந்த வேலையாட்களும் கேட்டனர் என்றால் சரியல்ல. காசோலைகள் வாங்கியதற்கு ஒரு கையொப்பம் இட சொல்லி கேட்டனர். கையொப்பம் இட்டு வந்தோம். செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்ட காசோலைகள் என்று எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 31-10-2018-இல் இருந்து 02-11-2018- வரை எதிரியின் மண்டியில் அரசியல் கட்சி நபர்களை வைத்து போராட்டம் நடத்தி எதிரியிடம் இருந்து காசோலைகள் பெற்றோம் என்றால் சரியல்ல. மேற்படி போராட்டத்தின்போது காவல்துறையினர் வந்து அழுத்தம் கொடுத்ததன் பேரில் காசோலைகளை எதிரி கொடுத்தார் என்றால் சரியல்ல. காவல் துறையினர் எங்களை தான் கலைந்து செல்லுமாறு மிரட்டி பின்னர் எதிரியிடம் கூறி காசோலைகளை பெற்றுத்தந்தனர். முதல் தடவை பலவந்தமாக எதிரியை மிரட்டியும், இரண்டாம் முறை காவல்துறையினர் அழுத்தம் கொடுத்தும், எதிரியிடம் இருந்து காசோலைகளை பெற்றோம் என்றால் சரியல்ல. எனக்கு

எஸ்.டி.சி. எண். 07 /2020

PW1- முருகேசன் த/பெ. கோவிந்தன்
தேதி- 03.02.2021
பக்க எண்- 7
குறுக்கு விசாரணை

வரவேண்டிய தொகையை விட அதிகமாக காசோலையில் நிரப்பி பெற்றுக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி உறசியுல்லாவிடம் இருந்து எதிரி மூலமாக எனக்கு வரவேண்டிய தொகை குறைவாகதான் உள்ளது என்றால் சரியல்ல. உறசியுல்லா யார் என்றே எனக்கு தெரியாது. எதிரி காசோலைகளை ஸ்டாப் பேமெண்ட் கொடுத்த விபரம் ஏற்கெனவே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. செக்யூரிட்டிக்காக எதிரியிடம் இருந்து பலவந்தமாக பெற்ற காசோலைகளை தவறாக இவ்வழக்கில் பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

ஒம்/ எம்.ஏ.சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.